
# அருள்மிகு மூலநாத சுவாமி திருக்கோயில்


தென்கரை.

சோழவந்தான் (வழி)

## தல வரலாற்றுச் சுருக்கம்







சிங்கேரிச் சங்கரரும் சீரோங்க வந்திருந்து
இங்குவிழாக் கண்டுவந்தார் இன்று.

தொகுப்பு

சு. இலக்குமணப்பெருமாள், பி. எஸ்சி.,


1980


# அருள்மிகு மூலநாத சுவாமி திருக்கோயில்
தென்கரை.

சோழவந்தான் (வழி)

## தல வரலாற்றுச் சுருக்கம்








சிங்கேரிச் சங்கரரும் சீரோங்க வந்திருந்து
இங்குவிழாக் கண்டுவந்தார் இன்று.

தொகுப்பு

சு. இலக்குமணப்பெருமாள், பி. எஸ்சி.,

1980



உயர்திரு. **இரா. தண்டபாணி** *B.Sc., B.L.,* அவர்கள்

துணை ஆணையர்

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**

மதுரை - 2.

# அருள்மிகு மூலநாத சுவாமி கோயில், தென்கரை.
# சோழவந்தான் (வழி)

## கோயில் வரலாறு

"வானவர் பூதலர் வாழ்த்திடத் தென்கரை வாழ்ந்திருக்கும்
தேன்மலர்க் கொன்றைத் திருமூலர்தாள் சென்னி சேர்த்திடுவோர்
ஊனுமுளமும் உயிரும் ஒளிபெற்று யர்வடைந்து
ஞானமுமெய்தி முடிவினில் முத்தியும் நண்ணுவரே".

சித்தார்த்தி ஆண்டு சிறந்ததை பத்தாம்நாள்
தித்திக்கும் தென்கரையூர் திருமூலர் குடமுழுக்கைப்
பக்தரெல்லாம் கொண்டாடப் பெற்றதொரு பாங்கிதனை
இத்தலத்தில் எடுத்துரைக்க எவர்கெளிதாம் அரிதன்றோ!

வெண்பா

சிங்கேரிச் சங்கரரும் சீரோங்க வந்திருந்து
இங்குவிழா கண்டுவந்தார் இன்று.

ஆக்கியோன்:
**புலவர், கு. குருநாதன்**

## 1. கோயில் இருப்பிடமும் அமைப்பும் :

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் சோழவந்தான் ஊரின் வைகைக்கு மேற்குக் கரையில் அமைந்துள்ளது தென்கரை கிராமம். இதில் அமைந்த, சுமார் 1000 ஆண்டுகள் பழமையான இந்தக் கோயில், பாடல் பெற்ற தலமாக இல்லாது போனாலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றுலும் சிறந்து விளங்குகிறது.

ராஜ' கோபுரம் சுற்றுச் சுவர்களோடு அமைந்துள்ளது. சுவாமி அம்மன் கோயில்கள் தனித்தனியாக, கொடிமரம், பலிபீடம் மற்றும் உள், வெளிப் பிரகாரங்களுடன் அமைந்துள்ளன. அம்மன் சன்னதிக்கு முன்பாகத் தெப்பம் ஒன்று உள்ளது.

## 2. மூர்த்தி, தலம், தீர்த்தம்

இறைவன் - அருள்மிகு மூலநாதர் என்பது பெருவழக்காக உள்ளது. இவருக்கு வில்வாரண்யீஸ்வரர், ஜனகபுரீஸ்வரர், ஆதி சிதம்பரேஸ்வரர் என்ற திருநாமங்களும் உண்டு. இறைவி அருள்மிகு அகிலாண்டேஸ்வரி.

இத்தலத்திற்கு வில்வாரண்யம், ஜனகபுரி, ஆதிசிதம்பரம் என்ற வேறு பெயர்களும் உண்டு. இறைவனின் திருநாமத்தைத் தொடர்ந்து இப்பெயர்கள் தோன்றியிருக்கலாம்.

அம்மன் சன்னதி முன்பாக உள்ளது சுவர்ண புஷ்கரணி என்ற தீர்த்தம். இதில் குளித்து இறைவனை வழிபட்டால் தோல் நோய்கள் நீங்கும். இத்தலத்திற்குரிய மரம் வில்வம்.

## 3. தலச்சிறப்பும் புராண வரலாறும்

1. சனகாதி முனிவர் நால்வரும், இத்தலத்தில் வாசம் செய்து இறைவனை ஸ்தோத்திரம் செய்து வந்ததால் இத்தலத்திற்கு சனகபுரி என்ற பெயர் விளங்கிவருகிறது.

2. இறைவனை இடையறுது தியானித்துக் கொண்டு, இங்குள்ள புஷ்கர்ணி யிலுள்ள தீர்த்தத்தை ஆலயத்தின் எந்த ஒரு இடத்திலாவது 48நாட்கள் தொடர்ந்து ஊற்றி வந்தால் அந்த இடத்தில் புதிய வில்வமரம் தோன்றி வளரும். வில்வ மரங்கள் நிறைந்திருந்ததால், வில்வாரண்யம் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த வனத்தில் பிரவேசித்தவர்களுக்கு மறுபிறப்பு கிடையாது.

3. குழந்தைப்பேறு இல்லாத குறையும், தீராதகுஷ்டம் முதலான கொடிய நோய்களும் அகிலாண்டேஸ்வரியின் கிருபாகடாக்ஷத்தால் தீருகின்றன.

4. வீரபாண்டிய மகாராஜனுக்குக் குஷ்ட ரோகம் நீங்கியது

5. பாம்பால் தீண்டப் பெற்று இறந்து போன மாடு மேய்ப்பவனின் சரீரத் தில் பெருமான் காயப் பிரவேசம் செய்து அவனுக்கு அனுக்கிரகம் செய்தது.

6. தமிழ் மொழியையும் அதன் மந்திரங்களையும் உண்டுபண்ணும்படி அகத்தியருக்கு மூலநாதர் அனுக்கிரகம் செய்தது.

7. அகிலாண்டேஸ்வரி கன்னிப் பருவத்தில் சுவர்ணபுஷ்கர்ணி தீர்த்தக் கரையில் பலநாட்கள் தவம்செய்து மூலநாதரைத் திருமணம் புரிந்து கொண்டது.

இந்த விபரங்கள் பிரும்ம கைவர்த்த புராணத்தில் பில்வாரண்ய க்ஷேத்ர மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளன.

## 4. நித்யப்படி, ஏறுபடி விவரங்கள்

இவ்வாலயத்தின் நித்யப்படியில், திருவனந்தல். விழாபூஜை, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் முதலிய காலங்களில் பூஜைகள் நடந்து வருகின்றன. காலசந்தியைத் தவிர இதர பூஜைகள் கட்டளைதாரர் களால் நடத்தப்படுகின்றன.

மாதாந்திரத்தில் வரும் பிரதோஷம், கார்த்திகை, பௌர்ணமி, முதலான வைகளும் நடராஜ அபிஷேகமும் இங்கு சிறப்பாகச் செய்யப்படுகின்றன. நடராஜா அபிஷேகத்தைத் தவிர இதர இனங்கள் கட்டளைதாரர்களால் செய்யப்படுகின்றன.

வருடாந்திரத்தில் சித்திரை வருடப்பிறப்பு, வைகாசிவிசாகம், ஆடிக் கார்த்திகை, ஆடிப்பூரம், ஆவணிமூலம், நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை 5 சோமவாரங்கள், பெரிய கார்த்திகை, திருவாதிரை, அஷ்டமிப் புறப்பாடு, தைக்கார்த்திகை, மாசிசிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்திரம் முதலான திருவிழாக்கள் கட்டளைதாரர்களால் நடத்தப்படுகின்றன. விஜயதசமி, விநயகசதுர்த்தி, தனுர்மாதபூஜை, தைப்பொங்கல் முதலிய விழாக்கள் கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்படுகின்றன.

## 5. கல்வெட்டுக்கள், மற்றும் திருப்பணி

இத்திருக் கோயிலிலுள்ள நந்தி சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. என தொல்பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திர மூர்த்தி, M. A. அவர்கள் தெரிவிக்கிறுர்கள். இங்குள்ள கல்வெட்டுகளில் 10 கல்வெட்டுக்கள் 1894-ஆம் ஆண்டிலும் 19கல்வெட்டுக்கள் 1910-லும் அரசி னரால் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில், அக்கால மன்னர்களும் மற்றவர்களும் கோயில் பூஜைக்கும், பிறகாரியங்களுக்கும் வழங்கிய நிபந்தங்களும் கட்டளைகளும்தெரியவருகின்றன இக்கல்வெட்டுக்கள் பற்றியும், சுற்றுக்கிராமங்களில் உள்ள கோயில்களின் வரலாற்றையும், நன்கு ஆராய்ந்து, விரிவான புத்தகம் ஒன்று தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் விரைவில்வெளியிடப்பட உள்ளது.

ஸ்ரீசிருங்கேரி சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் திருமுன்பாக 24—1—80 வியாழக்கிழமை அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. இதைத் தொடர்ந்து, திருமணமண்டபம், மற்றும் திருக்குளத் திருப்பணிக்காக "தர்மாத்மா" டாக்டர் *V*. வைத்ய சுப்ரமணயஅய்யர் அவர்கள் தலைமையிலும் திரு. *A. M.* ஆலடி சேர்வை அவர்கள் துணைத் தலைமையிலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, "சாரதா பக்தமணி" நாராயணி அம்மாள் வைத்ய சுப்ரமண்ய அய்யர்" உபயமாக 8500லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்த்தொட்டி அமைக்கப்பட்டுள்ளது திருமண மண்டபத் திருப்பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. எனவே மெய்யன்பர்கள் தங்களால் இயன்ற உதவியினைச் செய்து அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருள் பெற்றுய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

திருச்சிற்றம்பலம்.

# அருள்மிகு அகிலாண்ட ஈஸ்வரி பதிகம்.

## காப்பு

ஆதிமுதலே யரன்மகனே யைங்கரனே
நீதிநிறை தென்கரையாள் நிர்மலையாம்-ஜோதி
அகிலாண்ட ஈஸ்வரிமே லாம்பதிக மோத
முகிலேபோற் பாவருளென் முன்.

## பதிகம்.

1. அருள்பெருகு பாண்டியிற் பொருள்பெருகு ஜனகையை யடுத்துவரு வைகைவளமும்
அஞ்சொலார் கற்பறம் நிறைந்தினிய கல்வியா மறிவும்சிறந்து பஞ்ச
தருவைநிகர் தென்னைமா கதலியும் வருக்கையும் தக்கபலசாலி குலவி
தருமநெறி யதிலொழுகு குடிகள்பல மேன்மையாய் சந்ததமினி துவாழும்
பெருதுபுகழ் மாடமா ளிகைகூட கோபுரம் பெற்றினிது வாழ்வுயர்ந்த
பெரியோர்கள் வறியோரை மரியாதை யொடுபேணி பிக்ஷைநாடோறுமீந்து
திருவிழை கவிப்புலவர் மனமகிழ வுதவிபுரி செல்வஞ்சிறந்த பதியார்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

2. குறுமுனிவ னுளமறிய வினியத மிழதுபெறக் கோதறஉணர்த்து குகனைக்
குமரனென மகிழ்வினொடு வசுரகுல முடிவுதரு கூர்வேலளித்த தாயே
வறுமையெனு மொருபகைவ னெனைநலிய மனமருகி வாடினேனைப் பகைவனை
விரட்டும் பொருட்படை கொடுத்துதவி யென்றனையும் வாழ்வித்துவந்த முதல்வி
பொறுமையொடு முனதுதிரு வடிமலரை யனுதினம் போற்றிப்புகழ்ந்து பாடும்
புத்தியொடு பத்தியும் சித்தியொடு முத்தியும் பூரணம தாகவருள்வாய்
சிறுமைநெறி யனுகாத பெரியவர்க ளுறைகின்ற செல்வஞ்சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

3. ஊர்வன நடப்பன பறப்பனவு மப்பதனி லுள்ளவை மற்றபொருளும்
உமையுனது திருவடிவு கொடுவமையு மெனுமொழியி லொருசிறிது
மையமிலையால்
நார்மனதிட த்திலுறு சேயெனது வடிவும்நீ நாடிவந்தினி திருந்து
நல்லறிவு சொன்மலிவு கல்வியொடு செல்வமும் நண்ணுவகை
மதிகொழுத்தி
நேர்வன வறிந்ததிட ஞானமோனங் குலவுநீதி முறைவாழ்வு தருவாய்
நித்தமுன தற்புத நிறைந்திடு திருப்பதம் நினைத்தொழுகு நேமமருள்வாய்
சீர்வனம் நிறைந்தபிற சங்கழனி விளைவித்த செல்வஞ்சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

4. வாய்மெய்செவி விழிநாசி யெனுமைந்து பொறியினொடு மனமும்
பொருந்திநின்று
மாதேவி நினதுபணி புரிகின்ற பக்தியாம் மார்க்கமது அருள வேண்டும்
தூய்மைநெறி தனில்வரு பெரும்பொருள் படைத்துயான் சுகபோக
மனுபவித்து
சுற்றமொடு நற்றுணைவர் உற்றமனை மக்களோடு சூழவே வாழவேண்டும்
ஆய்மெய்யிது வன்னைநீ தனையன்யான் வேண்டுவது அருளியே வாதரித்து
அநுதினமு முனதுபுக ழதுபாடு புலமையும் அம்மையே தந்தாளுவாய்
செய்மையுள நாடுகளுமே புகழ வளமேவு செல்வஞ்சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

5. நவமான கோள்களவை யிடமாறி நிற்பினும் நல்லூழிலாத போதும்
நவரத்ன மணிமகுட ஓங்காரி நின்னிய நளினபத வருணுண்டெனில்
பவமான தோஷங்கள் பகல்கண்ட பனியனைய பாரத விலுண்மையாகும்
பலபுகழ்வ தெவனினி யிவ்வுலக நடையாவும் பராபரியுனது செயலே
தவமான மனைவாழ்வு சுகமேவு பொருளுடன் தந்தா தரித்தருளுவாய்
தாயிடம் பிள்ளைசலு கைக்கஞ்சுமோ விதுசுகத்துக் கடுத்த தன்றே
சிவமான திருமூல ரடிபேணு பெரியோர்கள் திகழுந் திருப்பதியெனும்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

6 தக்கனது மகளெனும் நாமந்தரித்திடச் சகியாது புரனே வேண்டிச்
சைலவிம வானினிய தனையையா யெய்தியும் தவமே புரிந்துநின்ற
அக்கண முதற்பொருளு மாறுவேடத்தொடு மடைந்துதவ விழை வேதன
அரனேமண மெய்திடுத லெனமொழிய நகைசெய்து அவனுமொரு பிச்சையாண்டி
தக்கதல தன்னேமண மேவெனச் செப்பவும் சகியாது நைந்தபோது
சங்கரனு மங்குவடி வங்கொடு விளங்கமகிழ் தற்பரிதனைய னெனையாள்
திக்குமுழு தும்புகழ் பெருக்கமுறு நெற்பெருகு செல்வஞ்சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

7. பொன்னுமிலர் புகழுமிலர் கலையுமிலர் நிலையுமிலர் புத்தியுமி லாரென்னினும்
பூரணம தாயுனது வாரண பதாம்புயம் போற்றுகுண மொன்றுண்டெனில்
இந்நில மதிற்புகழு ம்மன்னுறு பொருட் பொலிவும் எய்துவது முன்மையம்மே
இதையா னுணர்ந்துனது பதமே பணிந்துதினம் இனியபா மாலேசூடி
நன்னிலே யடைந்திட நினேந்தனன் நினேந்தபடி நல்வழிப் பொருள் கொடுத்து
நலமாக மனேமக்கள் துணேசுற்ற முய ர்வாழ்வு நண்ணுவகை யுதவிபுரிவாய்
தென்னவன் நிலத்துமிகு கன்னலொடு சென்னெல்சேர் செல்வஞ்சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

8. நாலுவித மானமறை யாலுமறியாதபத நளினமது காணும் நினேவாய்
நாடொறு முனேத்துதி புரிந்தே விரும்புமென் நயனங் களிக்க வருவாய்
மாலுமறி யாதசிவ நாதனது தேவிநீ வந்தெனது வறுமை நீக்கி
மனமது மகிழ்ந்திடவும் நினேவது தெளிந்திடவும் வரமுதவு சக்திதந்து
தாலுமுளருது கவி பாடுபுல வோனெனத் தக்கதமி ழது கொடுத்து
சஞ்சலம் கற்றியே யஞ்சலென் குறுவாய் சரவண பவன்றனேயே
சேலுமயி லோடுங்க ரானவிழி மாதர்நிறை சேர்திருப்பதி யாகிடும்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவி சிவகாமியுமையே.

9. கார்கால நிறைமதியின் வதனமும் வேலனைய கண்ணுஞ் சிலைப்புருவமும்
கழையனைய தோள்கமுகு கந்தரமதாகவும் கனமனைய கூந்தலழகும்
தார்காலு நறைபருகு ஞிமிறினது ரீங்கார சப்தங் குலாவு மொலியும்
தகதகென ஒளிபரவு கிண்கிணி முழங்கவும் சண்முகனை மடியில்வைத்து
நேர்காண வடியனது விழிகுளிர வந்தெனது நினைவுவழு வாதவண்ணம்
நிலமுதவு பொருளுதவு கலையுதவு தெருளுதவு நித்யகல்யாணி நிமலி
சீர்காலு மறிஞர் பலர் தாராள மனதொடுறை செல்வஞ் சிறந்த பதியாம்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே.

10. இத்தரையி லெத்தனை விதத்தில்யான் முயலினு மெனது மனமகிழ விலையே.
இறைவிநின் றிருவுருவு மிகுவிழிகள் குளிரவே யின்றுயான் கண்டதாலே
உத்தமி யெனக்கினிக் குறையொன்று மிலையெனு முறிதியது கைகொண் டனன்
உண்ணவு முடுக்கநல மெண்ணவு முடிக்கும்வகை யுதவியருள் செய்த தாயே.
நத்தனய னுக்கரிய பித்தனது பாகமுறு நாரணி பரிபூரணி
நலமெலா மெய்தியென் குலமெலா முய்யவும் நளினபத கிருபைதருவாய்
சித்தரொடு முத்தரும் பத்தரொடு வித்தகர் சிறக்கவாழ் பதியாகிடும்
தென்கரையில் மேவுமகி லாண்டஈஸ் வரியெனும் தேவிசிவகாமி யுமையே'

சுபம்.

## நூற்பயன்

இப்பதிக மோதின் இறவி யருளடைந்து
செப்பும் பலவளமும் சேர்ந்தினிதே — யெப்பொழுதும்
நன்மையுற வாழ்வார் நலமேவு நற்றமிழால்
சொன்னேன் உமையாள் துணை.

ஆக்கியோன்

**வித்துவான் வே. கந்தசாமி ஆச்சாரியார்**

## இணைப்பு: 1. செயல் அலுவலர் பட்டியல்

| எண். | பெயர் | நிர்வகித்த காலம் முதல் | நிர்வகித்த காலம் முடிய | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு. *T. K. P.* பெருமாள் | 24-4-53 | 30-11-54 | முதல் செயல் அலுவலர் |
| 2. | ,, *T. V.* சங்கர்ராவ் | 1-12-54 | 22-12-54 | கூடுதல் பொறுப்பு |
| 3. | ,, *R.* கிருஷ்ணமூர்த்திராவ் | 23-12-54 | 27-8-56 | |
| 4. | ,, *V. P.* கருப்பையா | 28-8-56 | 16-1-57 | |
| 5. | ,, *T.S.* சங்கரநாராயணன் *B. A.*, ஆய்வர் | 17-1-57 | 15-5-57 | கூடுதல் பொறுப்பு |
| 6. | ,, *M. S.* சம்பந்தம் | 16-5-57 | 7-9-62 | |
| 7. | ,, *N.* சிவனாண்டி *B.A.*, | 8-9-62 | 15-3-66 | |
| 8. | ,, *M. S.* சம்பந்தம் | 16-3-66 | 19-4-66 | கூடுதல் பொறுப்பு |
| 9. | ,, *B.* வீராசாமி *B.A.*, | 20-4-66 | 21-6-66 | |
| 10. | ,, *M. S.* சம்பந்தம் | 22-6-66 | 2-8-66 | கூடுதல் பொறுப்பு |
| 11. | ,, *B.* வீராசாமி *B.A.*, | 3-8-66 | 24-8-66 | |
| 12, | ,, *J.* சொக்கலிங்கம் | 25-8-66 | 5-10-66 | கூடுதல் பொறுப்பு |
| 13. | ,, *K.* சபாபதி *B.A.*, | 6-10-66 | 31-3-69 | |
| 14. | ,, *K.* சிவசங்கு | 1-4-69 | 31-8-70 | |
| 15. | ,, *M.* தெய்வகுமார் *B.A., B.L.*, | 1-9-70 | 15-5-74 | |
| 16. | ,, *M.* செல்லச்சாமி *B.A.*, | 16-5-74 | 15-5-76 | |
| 17. | ,, *K.* நடராஜன் | 16-5-76 | 27-9-76 | |
| 18. | ,, *N.* சண்முகம் | 28-9-76 | 10-3-79 | |
| 19. | ,, சு. இலக்குமணப் பெருமாள் *B.Sc.*, | 11-3-79 | ... ... ... | |

சொர்ணா அச்சகம், பேட்டைத் தெரு, சோழவந்தான்.